**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C.No. 282/2018** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | | Prosecution : | **PW - 1** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | பூமா | |
| Father / Husband Name | : | ஸ்ரீதரன் | |
| Village | : | சொர்ணபவனம், பிளாட் A. ராகவேந்திர புரம், ஸ்ரீரங்கம், | |
| Taluk | : | ஸ்ரீரங்கம் தாலுக்கா, திருச்சி மாவட்டம். | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | கண்காணிப்பாளர் (ஓய்வு) | |
| Age | : | 64/2023 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.01.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன், தட்டச்சர்**

**C.C.No. 282/2018 12.01.2023 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.40**

## முதல் விசாரணை:

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து 2018ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2012ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. நான் திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியில் இருக்கையில் நாகராஜன் என்பவரது பிறப்பு சான்றிதழின் உண்மைத் தன்மையை சரிபார்த்தபோது அது உண்மையான சான்று இல்லை என தெரிய வந்தது. நாகராஜன் புதுக்கோட்டையை சேர்ந்தவர் ஆவார். அவரை எனக்கு நினைவு

இல்லை. நாகராஜ் என்பவரின் சான்றிதழை சரிபார்ப்பதற்காக புதுக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். வட்டாட்சியர் அவர்கள் போலியான சான்றிதழ் என்று கடிதம் அனுப்பினார். நான் நாகராஜ் என்பவரிடம் போலி பிறப்புச் சான்றிதழ் குறித்து தகவல் தெரிவித்தவுடன் நாகராஜ் அலுவலகம் ஆஜராகி தனது பாஸ்போட்டினை அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட பிரிவில் ஒப்படைத்தார். நான் புதுக்கோட்டை காவல் நிலையத்திற்கு எழுத்து மூலமான புகாரினை அளித்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த புகார் மனுவுடன் நாகராஜ் என்பவரின் பிறப்புச் சான்றிதழ் நகலை இணைத்துள்ளேன். **(அந்த பிறப்புச் சான்றிதழ் நகல் அ.சா.ஆ.2 ஆக எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் புதுக்கோட்டை வட்டாட்சியர் அவர்கள் திருச்சி பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு நாகராஜ் அவர்களின் பிறப்புச் சான்றிதழின் உண்மை தன்மை குறித்து அனுப்பிய பதில் கடிதத்தின் நகல். **(அந்த கடிதம் அ.சா.ஆ.3 ஆக எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் 02.01.2009 ம் தேதியிட்ட Sanction for Prosecution கடிதம் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டதாகும். **(அந்த கடிதம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னை விசாரித்தது புதுக்கோட்டை காவல் துறையினர் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பம் மற்றும் கடிதங்களில் தேதி சீல் வைக்கப்படுமா என்றால் வைக்கப்படும். 2007 ம் ஆண்டில் இருந்து எங்கள் அலுவலகம் கணினி மயமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பெறப்பட்ட விண்ணப்பத்தில் தேதி சீல் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கணினி மூலம் பெறப்படுவதால் சீல் வைக்கப்படுவது இல்லை. நான் புகார் அளித்த தேதி 2012 ம் ஆண்டு ஆகும் . குறிப்பிட்ட தேதி எனக்கு ஞாபகம் இல்லை, இவ்வழக்கு

சம்மந்தமாக பெறப்பட்ட விண்ணப்பம், சான்றிதழ் ஆய்வு செய்தது மற்றும் அதன் சம்மந்தப்பட்டவைகள் திருச்சி அலுவலகத்தில் நடைபெற்றதாகும்.

நாகராஜுக்கு திருச்சி அலுவலகத்தில் இருந்துதான் பாஸ்போர்ட் வழங்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்கண்ட நடைமுறைகளுக்கும் தஞ்சாவூர் அலுவலகத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி எவ்வித பிறப்புச் சான்றிதழும் எங்கள் அலுவலகத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி எவ்வித போலி சான்றிதழ்களும் தாக்கல் செய்து பாஸ்போர்ட் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்குக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மீது கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2 வது எதிரி சுகுமாரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பிறப்பு சான்றிதழ் போலீயானவை என்று வட்டாட்சியர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில்தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் 2 வது எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.